முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1131

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.11.2022, வியாழக்கிழமை

1. ஓங்கார தவசியே அரங்கா வாழ்க
ஓங்கார தர்மமே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் உமக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது துலைதிங்கள்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 17 ம் நாள் 03.11.2022 வியாழக்கிழமை)
அரங்கனுக்கு ஆற்றல்பெருக எடுத்துரைப்பேன்
வாசி வென்ற ஞானியர் படைகள்
வலம் வந்து அரங்கனோடு கலந்து நிற்க
3. நிற்கவே கலியுகத்தில் அரங்கனே
நிலைத்தன்மை கொண்ட உயர் ஞானியாகும்
ஞானியரின் உண்மை வழி தன்னை நம்பி உலக மக்கள் தொடர்ந்து வர
நேமமுடன் அவரவர்க்கும் ஞானபலம் நிலைத்தன்மை உலகோர்க்கு பெருகி
4. பெருகியே கலியுகத்தில் மாற்றம்
பிரணவ சித்திமிகு ஞானமாக
முருகப்பெருமான் என் தலைமையிலே
முழுமைதனை ஏற்ற மக்கள் படையோடு
5. படைகள் நிரம்ப பழுதில்லா ஞான ஆட்சி
பாருலகமெங்கும் கண்டு சிறக்கக்கூடும்
தடையற அரங்கன் அவதார நோக்கத்தை
தரணியில் ஆறுமுகன் யான் பூர்த்தி செய்து வர
6. வருகவே அரங்கனைத் தொடர்ந்து
வலம் வருகின்ற மக்களெல்லாம்
பெருமைபட ஞானிகள் ஆகி
பேருலகில் அழியாமை பெறுவர் உறுதி உறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–